**24.02.2026**

**O.S.No.131/2015**

**பி.வா.சா.1 : புவனேஸ்வரி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கு சொத்து எனது அப்பா கணேசனுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உண்ணாமலை அம்மாளுக்கு பாத்தியப்பட்டது. எனது அப்பா பெயர் கணேசன் தான். 01.02.1982 தேதியில் எனது தந்தை கணேசனும் பெரியப்பா ராமசாமி மற்றும் எனது தாத்தா துரைசாமி படையாச்சியார் ஆகியோர் சேர்ந்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் எழுதினார்கள் என்றால் சரிதான் (வா.சா.ஆ.1). அதில் எனது அப்பாவுக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பிறகு எனது அப்பா வேறு எந்த சொத்தும் கிரயத்திற்கு வாங்கவில்லை என்றால் சரிதான்.

2) எனது அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை குறித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். ஈஸ்வரி மற்றும் பெரியம்மாள் என்றால் சரிதான். எனது அம்மா ஈஸ்வரிக்கு இரண்டு பெண்கள். நான் மற்றும் ஜெயந்தி என்றால் சரிதான். பெரியம்மாளுக்கு மூன்று பெண்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு கவிதா என்ற பெண் குழந்தை பிறந்து மூன்று வயதிலேயே இறந்து விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா உயிருடன் இருக்கும் வரை என் அம்மாவுக்கோ பெரியம்மாளுக்கோ எவ்வித ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

3) என் அப்பா இறந்தற்கு பின்னிட்டு நாங்கள் இரண்டு குடும்பமும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதவில்லை மற்றும் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை. எனது அப்பா 26.08.1986 ல் இறந்துவிட்டார். என் அப்பா இறந்ததற்கு பின்னிட்டு பெரியம்மாள் அவர்கள் குடும்பத்தின் கையொப்பம் இல்லாமல் 03.12.1993 ல் ஒரு பரிவர்த்தனை பத்திரம் எழுதி கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி குடும்ப சொத்தை

30.08.2012ல் நான் மற்றும் ஜெயந்தி மட்டும் குடும்ப சொத்தை எழுதி கொண்டோம் என்றால் சரிதான். என் அம்மா பெயரில் இருந்த சொத்தை தான் நாங்கள் எழுதி கொண்டோம் என்று சாட்சி சொல்கிறார். என் அப்பா இறந்த பிறகு என் அம்மா பெயருக்கு வந்தது.

4) என் அம்மா பெயரிலிருந்து நாங்கள் எழுதி கொண்டோம். நாங்கள் எழுதிய சொத்து என் அப்பாவுக்கு கிரயம் மூலமாகவும் பாகப்பத்திரம் மூலமாகவும் பாத்தியப்பட்ட சொத்தை தான் வா.சா.ஆ.3 படி நாங்கள் பாகப்பிரிவினை செய்துள்ளோம் என்றால் சரிதான். என் அப்பா சொத்தை ஜெயராமனுக்கு கொடுத்துவிட்டு பின்பு ஜெயராமன் சொத்தை என் அம்மா பெயரில் எழுதி வாங்கி கொண்டு பரிவர்த்தனை பத்திரம் செய்துள்ள நிலையில் என் அப்பா சொத்தை தான் நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். பத்மாவதி என்பவருக்கு என் பெயரில் உள்ள சொத்தை 27.10.2014ல் கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அது என்னுடைய பாக சொத்து.

5) எனக்கும் எனது சகோதரிக்கும் முழு உரிமை இல்லாத நிலையில் 4வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதேபோல நாங்களும் 3வது பிரதிவாதியும் எழுதி கொண்ட பரிவர்த்தனை பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் எனது அப்பாவின் இரண்டாவது மனைவியின் குழந்தைகள் என்ற நிலையில் அவர்களுக்கும் 1/18 பாக உரிமை உள்ளது என்றும் எனவே அதை மறுத்து நாங்கள் செய்துள்ள பரிவர்த்தனை பத்திரம் மற்றும் கிரய பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

6) சுமார் 1988ல் ஒரு விடுதலை முச்சலிக்கா பெரியம்மா மற்றும் தன்னுடைய மைனர் குழந்தைகளுக்காகவும் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி விடுதலை பத்திரத்தை நாங்கள் பதிவு செய்யவில்லை. நான் சொல்வது போல ஒப்படைத்துள்ள ஆவணம் விடுதலை பத்திரம் அல்ல என்றும் அந்த முச்சலிக்கா பதிவு செய்யப்படாததால் அது

சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் விடுதலை பத்திரம் ஒப்படைக்கவில்லை என்றும் முச்சலிக்காவை தான் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மேற்படி முச்சலிக்காவில் பெரியம்மாளுக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.24 17:46:56 +0530

**Subordinate Judge, Attur.**